**OS. 22/2024**

**நாள். 20.11.2025**

**வா.சா.1 – சுப்ரமணியன்**

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணம் 20.02.2019 தேதி என்றால் சரிதான். நான் தாவா வழக்கை 21.12.2023ம் தேதி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்புவரை கிரைய ஒப்பந்த பத்திரப்படி நிறைவேற்றிக்கொடுக்கும்படி 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த ஆவணம் போடும்போது 6 மாத காலத்திற்கும் கிரையத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என ஒப்பந்தம் என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு தயாராகவும், விருப்பமாகவும் இருக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிதான் சொத்தின் உரிமையாளர் என்பது தெரிந்தும், அவரிடம் கிரைய மீதி தொகையை கொடுக்காமல் மற்ற பிரதிவாதிகளிடம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தின் படி ரூ.5 இலட்சம் 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டது தவிர வேறு தொகை பெற்றுக்கொண்டதாக அவர் கையெழுத்தோ, ஆவணமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தனக்காக மற்ற பிரதிவாதிகளிடம் பணம் கொடுக்கலாம் என எழுத்து மூலமாக எழுதிக்கொடுததுள்ளாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 2, 3 பிரதிவாதிகளிடம் கிரைய தொகையை செலுத்தியதாக சொல்வது உண்மை இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் வெவ்வேறு வீட்டில் தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் 1, 2 பிரதிவாதிகள் ஒரு வீட்டிலும், 3ம்பிரதிவாதி மற்றொரு வீட்டிலும் வசித்து வருகின்றனர். 1 முதல் 3 பிரதிவாதிகள் தனித்தனியாக வெவ்வேறு

வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றும், நான் வேண்டுமென்றே ஒரே விலாசத்தில் வசிப்பதாக தவறாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா வழககை தாக்கல் செய்வதற்கு முன்பு 2, 3 பிரதிவாதிகளிடம் இவ்வளவு தொகை செலுத்தியுள்ளேன் என 1ம்பிரதிவாதிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு காவல் துறையில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து பெற்றுக்கொண்டேன் என்றும், அது சட்டப்படிக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு 1ம் பிரதிவாதி மீதி கிரைய தொகையை செலுத்தும்பட்சத்தில் கிரைய பத்திரம் எழுதிகொடுக்க தயாராக இருப்பதாக சொன்னார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதி கொடுக்க தயாராக இருந்தும், நான் தயாராக இல்லாததால், கிரைய ஒப்பந்த காலம் காலவதியாகிவிட்டதால் 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில மென்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் சட்ட காலத்திற்குள் கிரைய ஒப்பந்த ஆவணப்படி கிரைய பத்திரம பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்ககாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த காலமும் காலாவதியாகிவிட்டதால் கிரைய முன்பணமும் கேட்ட உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையத்தை ஏற்படுத்தி கொள்ள விருப்பமும, தயாராகவும் இருக்கிறேன் என 1 ம் பிரதிவாதிக்கு தெரிவிக்காததால் சட்டப்படி இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் கோரியவாறு 1ம் பிரதிவாதிக்கு தாவா கிரைய ஒப்பந்தப்படி கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க எந்தவித கடமையும் இல்லை என்றால் சரியல்ல. சொத்திற்கு உரிமையில்லாத நபர்களிடம் பணத்தை கொடுத்துவிட்டு 1ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் கேட்பது ஞாயமல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லாததை பயன்படுத்திக்கொண்டு தவறாக இந்த கிரைய ஒப்பந்தத்தை தயார்செய்து கொண்டு இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒருவேளை 2, 3 பிரதிவாதிகளுக்கு

நான் மீதி கிரைய தொகையை கொடுத்திருந்தாலும், அது 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

<u>4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.